# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S. No.214 of 2022

Deposition of PW.3

Name of the Witness: திரு.பூபதி

Date : 07.04.2026

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்)**

1) நான் ஏழாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வரவில்லை. நான் ஊத்தரங்கரை வட்டம் செங்கல்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 51 ஆண்டுகளாக தாவா சொத்து இருக்கும் இடத்தில் வசித்து வருவதாக சொல்லி இருப்பது உண்மைதான். நான் ஊத்தரங்கரையில் விவசாயம் செய்கிறேன். அரை கிலோமீட்டர் தள்ளிஉள்ள தொட்டம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய ஆதார் அட்டை செங்கல்பட்டி கிராம முகவரியில்தான் உள்ளது.

2) தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 15 ஏக்கர். அந்த 15 ஏக்கரும் பல சர்வே எண்களில் உள்ளது, சர்வே எண்கள் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் செக்குபந்தி எனக்கு தெரியாது. மலர் (எ) தீர்த்தகிரி, கருணாநிதி, அழகிரி, கந்தசாமி ஆகியோர் பெயரில் கண்ணுகவுண்டர் கிரயம் செய்து கொடுத்தார். அந்த கிரய பத்திரம் பதிவு செய்யும்போது நான் உடன் இல்லை. தவமணி, மல்லிகா,

அன்னம்மாள், வடிவு ஆகியோர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்சொன்ன வாதிகள் எனக்கு தெரிந்து 5 நபர்கள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மற்றவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்று எனக்கு தெரியாது.

3) கண்ணுகவுண்டர், மலர் (எ) தீர்த்தகிரி, கருணாநிதி, அழகிரி, கந்தசாமி ஆகியோர்களுக்கு வாதிகள் தவமணி, மல்லிகா, அன்னம்மாள், வடிவு சட்ட அறிவிப்பு அனுப்பினார்கள். 2021-2022 ல் அறிவிப்பு கொடுத்தார்கள், சரியான தேதி தெரியாது.

4) கண்ணுகவுண்டர், வாதிகள் தீர்த்தி (எ) சின்னபாப்பாவின் அப்பா. இவர்களுக்குள் 1993ல் பாக பிரிவினை ஏற்பட்டது பற்றி எனக்கு தெரியாது. சொத்துக்கள் மீது வங்கியில் லோன் வாங்கிய விவரம் தெரியும், எப்போது, எவ்வளவு ரூபாய்க்கு, எந்த வங்கியில் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் அந்த வங்கியையும் பிரதிவாதியாக சேர்த்துள்ளார்கள், எத்தனையாவது பிரதிவாதியாக சேர்த்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. வங்கியில் கடன் வாங்கியது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது.

5) வாதிகளின் தாயார் பெயர் தீர்த்தியம்மாள். அவர் இறந்து 15 வருடங்கள் இருக்கும். வாதியின் தந்தை இறந்து 20 வருடங்களுக்கு மேல் இருக்கும். அவர்கள் உயிருடன் இருக்கும்போதே பாகம் பிரித்து கொடுத்த விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்தின் வருவாய் ஆவணம் தற்போது யார் பெயரில் உள்ளது

என்று எனக்கு தெரியாது. கூட்டு குடும்ப சொத்துக்களின் வருவாயை கொண்டு எப்போது சொத்துக்கள் கிரயம் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. கூட்டு குடும்ப சொத்துக்களின் வருவாயை எவ்வளவு பிரித்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது.

6) 2021ல் ஊர் பொதுவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது. அப்போது நான் இருந்தேன். மொத்தம் 7–8 முறை பேசப்பட்டது. ஆனால் நான் ஒரு முறை தான் பஞ்சாயத்தில் கலந்து கொண்டேன். பஞ்சாயத்து பேசும்போது கண்ணுகவுண்டர், தீர்த்தகிரி, கந்தசாமி, கருணாநிதி, அழகிரி ஆகியோர்கள் வந்தார்கள். வாதிகள் தான் பஞ்சாயத்தை கூட்டினார்கள். நான் சொல்வதுபோல் பஞ்சாயத்து பேசப்படவில்லை என்றாலும் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் வாதிகளும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் பிரதிவாதிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1993ல் பாகம் ஏற்பட்டுவிட்டது என்றாலும் திரும்ப பாகம் கேட்க தகுதி இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.